JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - STC//1070/2018 |
| | : | Prosecution P.W – 1 |
| NAME | : | Thirumalaikumari |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 13.07.2022.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆத்துவழியில் குடியிருந்து வருகிறேன். நான் வீட்டை கவனித்து வருகிறேன். எனக்கு ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 2018 ம் வருடம் ஒரு நாள் ஆட்டோவில் சாம்பவார் வடகரையில் இருந்து ஆத்துவழிக்கு சக பயணிகளுடன் செல்லும் போது விபத்து ஏற்பட்டது, அந்த விபத்தை யார் ஏற்படுத்தினார் என்று எனக்கு தெரியாது. யார் ஆட்டோவை யார் ஒட்டினார் என்றும் எனக்கு தெரியாது. அந்த ஆட்டோவில் ஒட்டுநரை நான் பார்க்கவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான், அதை போலிசார் எழுதிக்கொண்டார்கள். அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது.அந்த புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா,ஆ,1 ஆககுறியிடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு

அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.

போலீஸ் விசாரணையின் போது கடந்த 15.07.2018 ம் தேதியன்று நானும் என்னுடன் மற்ற சாட்சிகளான ரத்தனஸ்ரீ, அனிஷா, வேலம்மாள், ஆகியோர்கள் ஆஜர் எதிரியின் ஆட்டோவில் சாம்பவார் வடகரையிலிருந்து கடையநல்லூர் ஊருக்கு தெற்குபுறம் மதியம் 2.45 மணிக்கு தெற்கு இருந்து வடக்கே நாக்கி கொல்லம் திருமங்கலம் தேசிய நெடுஞ்சாலையில் செல்லும் போது ஆஜர் எதிரி ஆட்டோவை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஒட்டி ஆட்டோ கவிழ்ந்ததில் எங்களுக்கு விபத்து ஏற்பட்டது என்றும், அது குறித்து நடவடிக்கை எடுக்க போலிசில் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும், போலிசார் விசாரணையின் போது சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.

JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

Calendar }

Miscellaneous } Case No : - STC//1070/2018

: Prosecution P.W –2

NAME : Rathi nathi shree

FATHER'S NAME :

VILLAGE :

TALUK :

CASTE :

CALLING :

RELIGION :

AGE :

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 13.07.2022.

முதல் விசாரணை

நான் தற்போது வாசுதேவநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது எட்டாம் வகுப்பு படித்து வருகிறேன் .

| | | |
|---|---|---|
| 1 | கேள்வி | உங்கள் பெயர் என்ன? |
| | பதில் | ரதிநதிஶ்ரீ |
| 02 | கேள்வி | உங்க அப்பா பெயர் என்ன? |
| | பதில் | ரமேஷ்குமார் |
| 03 | கேள்வி | உங்கள் அம்மா பெயர் என்ன? |
| | பதில் | திருமலைக்குமாரி |
| 04 | கேள்வி | நீங்கள் என்ன படித்துள்ளீர்கள் ? |
| | பதில் | 8 ம் வகுப்பு படித்துக்கொண்டியிருக்கிறேன். |
| 05 | கேள்வி | உங்கள் வயது மற்றும் பிறந்த தேதி என்ன? |

| | | |
|---|---|---|
| | பதில் | 13/2022 பிறந்த தேதி 05.10.2009 |
| 06 | கேள்வி | உங்களுக்கு எந்த ஊர் ? |
| | பதில் | வாசுதேவநல்லூர் |
| 07 | கேள்வி | இது எந்த இடம் என்று தெரிகிறதா? |
| | பதில் | கோர்ட் |

சாட்சி அ.சா,1 என் அம்மா ஆவார். எனக்கு ஆஜர் எதிரியை தெரியும். நான் ஆட்டோவில் செல்லும் போது எனக்கு காயம் ஏற்பட்டது, அந்த விபத்து எப்படி ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாாிக்கப்பட்டது.

போலீஸ் விசாரணையின் போது கடந்த 15.07.2018 ம் தேதியன்று நானும் என்னுடன் மற்ற சாட்சிகளான என் அம்மாவுடன், அனிஷா, வேலம்மாள், ஆகியோர்கள் ஆஜர் எதிரியின் ஆட்டோவில் சாம்பவார் வடகரையிலிருந்து கடையநல்லூர் ஊருக்கு தெற்குபுறம் மதியம் 2.45 மணிக்கு தெற்கு இருந்து வடக்கு நோக்கி கொல்லம் திருமங்கலம் தேசிய நெடுஞ்சாலையில் செல்லும் போது ஆஜர் எதிரி ஆட்டோவை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஒட்டி ஆட்டோ கவிழ்ந்ததில் எங்களுக்கு விபத்து ஏற்பட்டது என்றும், அது குறித்து நடவடிக்கை எடுக்க போலிசில் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும், போலிசார் விசாரணையின் போது சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.